# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1967/6 - 2016 මැයි මස 16 වැනි සඳුදා - 2016.05.16

1967/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: அம்பகோ/3/1/அ/143-ஏ
காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/7/2013/எச்.டபிள்யூ/577

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், அம்பகமுவ கோரளை சிறு பிரிவில், குடாஓயா கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.07.30 ஆந் திகதி ஆரம்ப வரைபட இல நு : 3014 இல் துண்டிலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ள சுமார் 0.01456 ஹெக்டயார் முழு விஸ்தீரணம் கொண்ட குடாஓயா வத்தை என அழைக்கப் படும் காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: குடாஓயா வத்தை; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி: பீ. கே. சீ. எஸ். குமார, இல. 06, நுவரெலியா வீதி, குடாஓயா, ஹற்றன்; விஸ்தீரணம்: 0.0145 ஹெக்டயார்.

**எல்லைகள் :-**

வடக்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் ஆ.வ.நு 2786 இல் துண்டு இலக்கம் 92; கிழக்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் ஆ.வ.நு 2786 இல் துண்டு இலக்கம் 93; தெற்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் ஆ.வ.நு 2786 இல் துண்டு இலக்கம் 93 மற்றும் எச்.ஐ.பீ.ஐ. 45509 இன் பகுதி; மேற்கு: எச்.ஐ.பீ.ஐ. 45509 இன் பகுதி.

மேற்குறித்த காணித்துண்டிற்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, அம்பகமுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்ளையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர்.டி.பீ. சுமனசேகர,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்தேனை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ,
2016, மே 11.

6 - 02


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.